மும்பையில், உலகளாவிய கடல்சார் இந்திய உச்சிமாநாடு 2023, அக்டோபர் 17 முதல் 19 வரை நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. தமிழ்நாட்டிற்கான தனி அமர்வில், தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு, நேற்று முன்தினம் (17.10.2023) மாலை உரையாற்றினார். இந்த அமர்வில், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் ஒன்றிய, மாநில அலுவலர்கள் பங்கு பெற்றனர்.

தமிழ்நாடு முதல்வர் - முதலீட்டுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதில் முனைப்பாக இருக்கிறார்!

உலக முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்திட வாரீர்!

மும்பையில் நடைபெற்ற - உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாட்டில் அமைச்சர் எ.வ.வேலு உரை!

மும்பை, அக்.19-

மும்பையில் நடைபெறும், உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, "தமிழ் நாட்டில் எங்கள் முதல்வர் அவர்கள், முதலீட்டுக்கு நல்ல சிறப்பான, சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தருவதில் முனைப்பாக இருக்கிறார். எனவே, உலக முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்ய வருமாறு, எங்கள் முதல்வர் அவர்கள் சார்பில் அன்போடு அழைக்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

உலகளாவிய கடல்சார் இந்திய உச்சிமாநாடு2023 மும்பையில் அக்டோபர் 17 முதல் 19 வரை, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாநாட்டின் முதல் நாளான நேற்று முன்தினம் (17.10.2023), கடலோர மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை பொறுப்பு வகிக்கும் அமைச்சர்கள் பங்கு பெற்றுள்ளனர். தமிழ்நாட்டின் சார்பாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டார்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும், தனித்தனி அமர்வுகள் ஏற்படுத்தி, அந்தந்த மாநிலங்களில் முதலீட்டு வாய்ப்புகள், மாநிலத்திற்கான வளர்ச்சித் திட்டம், இணைப்பு நெட்வொர்க்குகள், முற்போக்கான உள்கட்டமைப்பு மற்றும் எளிதான வியாபாரம் போன்றவை தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிற்கான தனி அமர்வில், நேற்று முன்தினம் மாலை 4.00 மணி முதல் 5.30 மணி வரை, தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமையில் விவாதம் தொடங்கியது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் சந்தீப் நந்தூரி வரவேற்புரையைத் தொடர்ந்து, அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றியதாவது :-

தமிழ்நாடு சிறப்பு அரங்கில், பங்குபெற்ற ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் மற்றும் உலகளாவிய துறை முகம் மற்றும் கடல்சார் நிபுணர்கள், முதலீட்டாளர்கள் அனைவரையும் வரவேற்கிறேன்.

இன்றைய உலக நடப்பில், அனைத்து நாடுகளின் வர்த்தகமும் நீர்வழிகளையே நம்பியுள்ளது. சுமார் 80 சதவீதம், சர்வதேச சரக்குகள் கப்பலின் வழியே பயணிக்கின்றன. ஆசிய நாடுகளில், சுமார் 64 சதவீதம் இறக்குமதி சரக்குகளும், 42 சதவீதம் ஏற்றுமதிச் சரக்குகளும் கையாளப்படுகின்றன.

பண்டைய காலங்களில், தமிழ்நாடு, கடல்சார் வர்த்தகத்தில் மிக முக்கிய பங்காற்றியுள்ளது. சோழர் காலத்தில் கடல்சார் வர்த்தகத்தில் தமிழ்நாடு மையமாக திகழ்ந்துள்ளது. கொற்கை, அழகன்குளம், பூம்புகார், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய துறைமுகங்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள துறைமுகங்களுடன் வர்த்தகத் தொடர்பைக் கொண்டிருந்தன. நம் முன்னோர்கள் கடல்சார் வணிகத்தின் முக்கியத்துவத்தை அறிந்து வைத்து செயல்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு, 1,076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. இந்தியாவின் கடல்சார் செயல்பாடுகளில், தமிழ்நாடு மிக முக்கிய பங்காற்றி வருகின்றது. சர்வதேச கடல் வணிக பாதையின் அருகில், தமிழ்நாடு கடற்கரை அமைந்துள்ளது. இந்தியாவின் சிறப்புமிக்க சென்னை, எண்ணூர், தூத்துக்குடி ஆகிய மூன்று பெரும் துறைமுகங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

இந்த பெரும் துறைமுகங்களுடன், அறிவிக்கப்பட்டுள்ள 17 சிறு துறைமுகங்களும் உள்ளன. குறிப்பாக, காட்டுப்பள்ளித் துறைமுகம், பெரும் துறைமுகங்களுக்கு இணையாக செயல்பட்டு வருகிறது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகங்களுடன் சிறு துறைமுகங்கள் முக்கியப் பங்காற்றி, வளர்ந்துவர மிகச் சாதகமான சூழ்நிலை தமிழ்நாட்டில் உள்ளது.

இந்திய கடல்சார் வளர்ச்சியில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. கடல்சார் வணிகம் என்பது வெறும் சரக்குப் போக்குவரத்து மட்டுமல்ல; நிலையான வளர்ச்சி, வேலைவாய்ப்பை உருவாக்குதல், தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவைகளையும் உள்ளடக்கியது.

இந்தியாவை உலக அளவில் கடல்சார் வர்த்தகத்தின் முதன்மையிடத்தில் கொண்டு செல்ல, நம் முன் னெடுப்புகள் பேருதவியாக உள்ளன. மேலும், உலக முதலீட்டாளர்கள் அனைவரும் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் திட்டங்களில், முதலீடு செய்ய வேண்டும்.

இந்த அரங்கில் உள்ள அனைத்து முதலீட்டாளர்களிடம், தமிழ்நாட்டில் கடல்சார் கட்டமைப்பில் பல்வேறு வளர்ச்சி மற்றும் இணைந்து செயல்படும் வாய்ப்புகள் உள்ளன. இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைப் பகுதியைக் கொண்ட கடல் பகுதியில் ஒரு நுழைவு வாயிலாக உள்ளது.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, தமிழ்நாடு கடல்சார் வாரியம் முக்கியப் பங்காற்றுகிறது. முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்வதை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெரிதும் விரும்புகிறார். எங்கள் முதலமைச்சர் அவர்கள் முதலீட்டுக்கு நல்ல சிறப்பான சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தருவதில் முனைப்பாக இருக்கிறார் என்பதால், உலக முதலீட்டாளர்கள், தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்யும்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பாக, கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஔவையார் பாடிய கொன்றைவேந்தனில் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக் கேற்ப, தமிழ்நாட்டில் முதலீடு செய்து திரவியம் தேட நல்ல காலச்சூழ்நிலை உள்ளது. இதனைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வேண்டும்.

எங்கள் முதலமைச்சர் அவர்கள், வரும் 2024 ஜனவரி மாதம் 7 மற்றும் 8 ஆம் தேதிகளில், சென்னையில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்தத் திட்டமிட்டுள்ளார். இங்கு வந்துள்ள அனைத்து முதலீட்டாளர்களையும், இம்மாநாட்டில் கலந்து கொள்ள, தமிழ்நாடு முதலமைச்சர் சார்பாக அன்புடன் அழைக்கிறேன். முதலீட்டாளர்களின் முக்கிய இடமாக தொன்றுதொட்டு தமிழ்நாடு இருந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில், தமிழ்நாட்டிற்கான அமர்வில், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர் ராஜேஷ் லக்கானி, யோகோஹாமா டயர்ஸ் நிர்வாக துணைத் தலைவர் பத்மகுமார், இரயில் மற்றும் உள்நாட்டு முனையங்கள் துணைத் தலைவர் அதெந்த்ரு ஜெயின், APACTECO வணிக மேம்பாடு மற்றும் விற்பனை இயக்குநர் நிகில் கார்க், ACME குழுமத்தின் தலைமை இயக்க அதிகாரி சந்தீப் காஷ்யப், PSA இந்திய நிறுவனத்தின் மூத்த ஆலோசகர் கேப்டன் சுரேஷ் அமிரபு, JSW திட்டங்கள் செயல் துணைத்தலைவர் ராகேஷ் சிசோடியா, ஹுண்டாய் மோட்டார்ஸ் நிறுவன பிராந்திய விற்பனைத் தலைவர் சௌரப் ஷஹாபுர்கர் ஆகியோர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மாநில துறைமுக அலுவலர் கேப்டன் எம்.அன்பரசன் நன்றியுரையாற்றினார்.

"கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொள்வதற்காக செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் செல்லும் வழியில், நேற்று முன்தினம் (17.10.2023) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்த மாணவன் சந்தோஷின் தாயார், தனது மகன் முதலமைச்சர் அவர்களை சந்திக்க விரும்புவதாக தெரிவித்ததையடுத்து, நேற்று (18.10.2023) ஆய்வுக் கூட்டத்திற்கு செல்லும் வழியில் முதலமைச்சர் அவர்களை மாணவன் சந்தோஷ் சந்தித்த போது, " திருக்குறள் உரை" புத்தகம் வழங்கி வாழ்த்தினார்.

ஐ.நா.அமைப்பின் மதிப்புமிகு முதலீட்டு விருது பெற்றுள்ள

தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு பாராட்டு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, அக். 19-

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சார் முதலீடுகளை அதிகரிப்பதில் ஆற்றிய சிறப்பான பணிகளுக்காக ஐ.நா.அமைப்பின் மதிப்புமிகு முதலீட்டு ஊக்குவிப்பு விருது 2023ஐ பெற்றுள்ள தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்தை பாராட்டுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

புதுப்பித்தக்க ஆற்றல் சார் முதலீடுகளை அதிகரிப்பதில் ஆற்றிய சிறப்பான பணிகளுக்காக ஐ.நா. அமைப்பின் மதிப்புமிகு 'முதலீட்டு ஊக்குவிப்பு விருது2023'ஐப் பெற்றுள்ள தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி (Guidance TN) நிறுவனத்திற்கு என் பாராட்டுகள்.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் புதுமையான அணுகுமுறைகளும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளில் கொண்டுள்ள அர்ப்பணிப்பும் உண்மையிலேயே குறிப்பிடத்தக்கவை. அவை பசுமையான எதிர்காலத்துக்கான நமது திராவிட மாடல் அரசின் உறுதியான ஈடுபாட்டைப் பறைசாற்றுவதாக அமைந்திருக்கின்றன.

இந்தப் பெருமைமிகு மைல்கல்லை அடைந்ததற்காக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் விஷ்ணு ஐ.ஏ.எஸ் மற்றும் கடுமையாக உழைத்து வரும் அனைத்து உயர் அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆலோசனையின்படி

மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்கள் போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்பு !

அயலக தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதம்!

திருப்பூர், அக்.19-

உலகத் தமிழர்கள் மீது அளவற்ற பாசமும், நேசமும் கொண்ட நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்களை போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டு வர கண் துஞ்சாது பாடுபட்டு வருகிறோம் என அயலக தமிழர் நலவாரியத் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதத்துடன் கூறினார்.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிரமடைந்து வரும் நிலையில் தமிழர்கள் பலர் தாயகம் திரும்ப இயலாமல் அங்கு சிக்கித் தவிக்கின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அங்குள்ள தமிழர்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் உதவி எண்கள் வெளியிட்டு அவர்களது விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமும், இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்திடமும் பகிரப்பட்டு அவர்களை தாயகம் மீட்கும் பணியைச் செய்து வருகிறோம் மேலும் கைபேசி புலனக் குழு (வாட்சப் குழுக்கள்) அமைக்கப்பட்டு அங்குள்ள தமிழர்களின் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த தமிழர்களில் தாயகம் திரும்புவதற்காக பதிவு செய்த நபர்களில் கோயம்புத்தூர், திருவாரூர், கடலூர், திருச்சி, தேனி, கரூர், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சென்னை முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 தமிழர்கள் ஒன்றிய அரசின் ஆபரேஷன் அஜய் திட்டம் மூலம் முதற் கட்டமாக 12.10.2023 அன்று இஸ்ரேலில் இருந்து புறப்பட்டு சிறப்பு விமானத்தில் 13.10.2023 அன்று காலை 6 மணிக்கு புது டெல்லி வந்தடைந்தனர். புது டெல்லி விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் அயலக நலத்துறை சார்பில் வரவேற்பு மையம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு ஏற்பாடுகள் செய்துள்ளோம். மேலும் தமிழ்நாடு அரசு செலவில் விமான பயண சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு 14 நபர்கள் சென்னை விமான நிலையத்திற்கும், 7 நபர்கள் கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கும் வந்தடைந்தனர்.

சென்னை விமான நிலையத்திற்கு வந்தடைந்த 14 தமிழர்களையும், தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பாராளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி, அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ் ஆகியோர் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்குச் செல்ல வாகன வசதி ஏற்பாடு செய்து அனுப்பி வைத்தோம்.

கோயம்புத்தூர் விமான நிலையம் வந்தடைந்த 7 தமிழர்களையும், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார். உலகத் தமிழர்கள் மீது அளவற்ற பாசமும், நேசமும் கொண்ட நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்களை போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டு வர கண் துஞ்சாது பாடுபட்டு வருகிறோம் என அயலக தமிழர் நலவாரியத் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதத்துடன் கூறினார்.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி, ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கான

பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், அக். 19 -

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி, ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக முகவர்களுக்கான (BLA2) ஆலோசனை கூட்டம் இன்று (19.10.2023 - வியாழக் கிழமை) கீழ்க்கண்ட இடங்களில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலுவின் ஆலோசனைபடி திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற உள்ளது.

வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி காலை 10.00 மணி, இடம் கே.பி.ஏ.பேலஸ் வாணியம்பாடி. ஆம்பூர் சட்டமன்ற தொகுதி பிற்பகல் 2.00 மணி, இடம் பிரியா மஹால் ஆம்பூர்.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், வாணியம்பாடி, ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.

நாமக்கல் நகர்மன்ற அவசர கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் நகர் மன்றத் தலைவர் து.கலாநிதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும். மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நகராட்சி ஆணையாளர் சென்னுகிருஷ்ணன், நகரமன்றத் துணைத் தலைவர் செ.பூபதி, பொறியாளர்கள், நகராட்சி அலுவலர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருநின்றவூரில் காலை உணவுத் திட்டம்! சா.மு.நாசர் ஆய்வு!

திருவள்ளூர், அக். 19 -

தமிழ்நாடு அரசின் காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தி அனைத்து தொடக்க பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.. இந்த நிலையில் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவடி அடுத்த திருநின்றவூர் கோமதிபுரம் அரசு தொடக்கப்பள்ளியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. காலை உணவுத் திட்டத்தை தரம் மற்றும் தயாரிக்கும் முறைகள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்த அவர், காலை உணவுத் திட்ட ஆய்வு குறித்து படிவம் பூர்த்தி செய்தார். இதனை தொடர்ந்து புதியதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறையை ஆய்வு மேற்கொண்டார் அதோடு கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டி தர ஆசிரியர்கள் கோரிக்கையை சட்ட மன்ற நிதியில் கட்டித்தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதனை தொடர்ந்து பேசியா அவர் நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக் கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை சிலருடைய குடும்ப வறுமையின் சூழ்நிலையை காரணமாக குழந்தைகள் காலை உணவு உண்டுவதில்லை நிலையை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மனதில் கொண்டு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்பான திட்டத்தை தொடங்கி வைத்தார் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், தொடங்கப்பட்ட நாள்முதல், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, நல்ல பயன் அளித்து வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 71/2023 நாள். 17.10.2023

வ.எண்.	பணியின் விபரம்	மொத்த பணிகளின் எண்ணிக்கை	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம்
1	வார்டு எண். 7,8,9,11,25, 27,28,43,50,56,57,58, 59,60,61,62,68,69, 70க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல்	23 பணி	07.11.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock)	08.11.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock)

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –1, தொலைபேசி எண். 0422 2396026. Email: commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 559/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 17.10.2023

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் நேற்று நாட்றம்பள்ளியில் உள்ள ஜோலார்பேட்டை சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.சம்பத்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், ஜோலார்பேட்டை நகரச் செயலாளர் ம.அன்பழகன், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியச் செயலாளர் க.உமாகன்ரங்கம், ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.சதிஷ்குமார், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி, திருப்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.ஆர்.திருப்பதி, கந்திலி தெற்கு ஒன்றியச் செயலாளர் டி.அசோக்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி மற்றும் பாக முகவர்கள் (BLA2) கலந்து கொண்டார்கள்.